www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

**10 - STD**

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2023

## பொதுத்தமிழ்

நேரம்: 3.00 பதிவு எண். [illegible] மதிப்பெண்கள்: 100

பகுதி - I 15 x 1 = 15

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. 'உனதருளே பார்ப்பன் அடியேன்' யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

2. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

3. 'பிழையா நன்மொழி' என்று வாய்மையைக் குறிப்பிடும் நூல்.
அ) சிறுந்தொகை ஆ) நற்றிணை இ) திருக்குறள் ஈ) புறநானூறு

4. ஜெயகாந்தன் படைப்புகளில் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்.
அ) யாருக்காக அழுதான் ஆ) சில நேரங்களில் சில மனிதர்கள்
இ) உன்னைப்போல் ஒருவன் ஈ) ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

5. காலம் கரந்த பெயரெச்சம் என்பது
அ) வினைத்தொகை ஆ) உவமைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை

6. குறிப்பு விடைகளின் எண்ணிக்கை
அ) மூன்று ஆ) ஆறு இ) ஐந்து ஈ) எட்டு

7. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஈ) அங்கு வறுமை இல்லாததால்

8. 'கானடை' என்னும் சொல்லைப் பிரித்தால் பொருந்தாத பொருளைக் குறிப்பிடுக.
அ) கான் அடை - காட்டைச் சேர் ஆ) கால் உடை - காலால் உடைதல்
இ) கான் நடை - காட்டுக்கு நடத்தல் ஈ) கால் நடை - காலால் நடத்தல்

9. திணை வழுவமைதியைக் கண்டறிக.
அ) 'இந்தக் கண்ணன் வேலை முடியாமல் ஓயமாட்டான்' என்று தன்னையே குறிப்பிடுவது.
ஆ) வாடா செல்லம் என்று தாய் மகளை அழைப்பது
இ) 'என் தங்கை வந்தாள்' என்று பசுவைக் குறிப்பிடுவது
ஈ) குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்

10. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை.
அ) குலை வகை ஆ) மணிவகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

11. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது.
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

'நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல நிமிர்ந்த மாஅல் போல,
பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை.....'

12. இப்பாடல் இடம்பெற்ற நூல்.
அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம் இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

13. தடக்கை - இலக்கணக் குறிப்பு.
அ) வேற்றுமைத் தொடர் ஆ) வினைமுற்றுத்தொடர்
இ) உரிச்சொல் தொடர் ஈ) இடைச்சொல் தொடர்

14. பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள்
அ) பாடு தமிழ், கோடு கொண்டு ஆ) கோடு கொண்டு, பெரும்பெயல்
இ) நனந்தலை, வலம்புரி ஈ) பொறித்த, பொழிந்த



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

15. பாடலில் இடம்பெற்றுள்ள அளபெடை
அ) பொறித்த ஆ) வளைகி இ) பனிக்கடல் ஈ) தடக்கை

## பகுதி - II பிரிவு - 1

**II. ஏதேனும் 4 வினாக்களுக்கு குறுகிய விடை தருக. (21 வது வினா கட்டாய வினா) 4 x 2 = 8**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:-
அ) மொழிபெயர்ப்பு, மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி மொழி வளர்ச்சி வழிவகுக்கிறது.
ஆ) பாவாணர் உலகத்தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.
17. வசன கவிதை - குறிப்பு வரைக.
18. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
19. ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் 'பெப்பர்' குறித்து எழுதுக.
20. தாய்மொழியும், ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.
21. 'தரும்' என்ற முடியும் குறட்பாவை எழுதுக.

## பிரிவு - 2

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடை தருக. 5 x 2 = 10**

22. 'நாற்றிசையும் செல்லாத நாடில்லை' இத்தொடரில் இடம்பெறும் தொகைச் செல்லைக் கண்டறிந்து விரித்து எழுதுக.
23. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
24. கலைச்சொல் தருக.
அ) Folk Literature ஆ) Emblem
25. பழமொழியைப் பொருத்துக.
அ) ஆறில்லா ஊருக்கு - சோற்றுக்கு ஒரு சோறு பதம்
ஆ) உப்பில்லாப் பண்டம் - நூறு வயது
இ) நொறுங்கத் தின்றால் - குப்பையிலே
ஈ) ஒரு பானை - அழகு பாழ்
26. பகுபத உறுப்பிலக்கணம் தருக: - 'வென்ற'
27. கொடுக்கப்பட்ட இரு செற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க :- இயற்கை - செயற்கை.
28. தொடரில் பொருந்தாப் பொருள் தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்தி எழுதுக.
இலுப்பை பூக்கள் இனிமையானவை கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பிரித்து உண்ணும் பாதிரிப்பூ குடிநீருக்குத் தண் மனத்தை ஏற்றும்.
குறிப்பு : செவி மாற்றுத் திறனாளிகளுக்கான வினா:
சொற்களை இணைத்து நான்கு புதிய சொற்களை உருவாக்குக.
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, சேய், மேகலை, வான், பொன், பூ.

## பகுதி - III பிரிவு - I

**III. ஏதேனும் 2 வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக. 2 x 3 = 6**

29. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' - இடம் சுட்டிப் பொருள் தருக.
30. நீவிர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடுகள் மூன்றினை எழுதுக.
31. உரைப்பத்தியை படித்து வினாக்களுக்கு விடை தருக.
தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு, முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால் தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.
வினாக்கள் :
அ) விருந்தினர் என்போர் யாவர்?
ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?
இ) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## பிரிவு - 2

**III. ஏதேனும் 2 வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக. (34 வது வினா கட்டாய வினா) 2 x 3 = 6**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
33. 'எவையெல்லாம் அறியேன்' என்று கருணையன் கூறுகிறார்?
34. அடிபிறழாமல் எழுதுக.
அ) அருளைப் பெருக்கி : எனத் தொடங்கு; நீதிவெண்பா பாடல் (அல்லது)
ஆ) 'தூசும் துகிரும்' - எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்



CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

பிரிவு - 3

ஏதேனும் 2 வினாக்களுக்கு விடை தருக. 2 x 3 = 6

35. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்களைச் சுட்டி விளக்குக.

36. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

37. 'அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **5 x 5 = 25**

38. அ) தமிழையும், கடலையும் ஒப்பிட்டு இரட்டுற மொழியும் பாங்கினைச் சந்தக் கவிமணி தமிழழகனார் வழி நின்று விளக்குக.
ஆ) காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைச் சிறப்பித்து எழுதுக.

39. அ) 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பில் மாநில அளவில் நடத்தப்பெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனைப் பாராட்டி மடல் எழுதுக. (அல்லது)
ஆ) 'பள்ளித் தூய்மை - செயல்திட்டம்' ஒன்றை உருவாக்கி மாணவர்களின் சார்பாக மாணவர் தலைவரான நீங்கள், உங்கள் பள்ளியின் தலைமை ஆசிரியருக்குக் கடிதம் ஒன்று வரைக.

40. காட்சியினைக் கண்டு கவினுற எழுதுக.



41. மதுரை அரசு மேல்நிலைப்பள்ளியல் பயிலும் மங்கை என்பவர் பூப்பந்து விளையாட்டுப் பயிற்சில் சேர தன் தந்தை செல்வத்துடன் சென்று விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராகச் சேர்வதாகக் கருதி விண்ணப்பத்தை நிரப்புக.

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர்**
**சேர்க்கை விண்ணப்ப படிவம்**

1. மாணவரின் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி :
4. தேசிய இனம் :
5. இரத்த வகை :
6. உயரம் மற்றும் எடை :
7. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
8. வீட்டு முகவரி :

9. தொலைபேசி / அலைபேசி எண் :
10. இறுதியாக படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளியின் முகவரி :

12. சேர விரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண் :
தேதி: :
இடம் :

மாணவரின் கையெழுத்து

பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

42. அ) புயல் அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க:

1. Education is what remains after one has forgotten what one has learned in school. - *Albert Einstein*
2. Tomorrow is often the busiest day of the week - *Spanish proverb*
3. If is during our darkest movement that we must focus to see the light - *Aristotle.*
4. Success is not final: failure is not fatal It is the courage to continue that counts. - *Winston Churchill.*

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி** **3 x 8 = 24**

43. அ) சங்க இலக்கியப் பாடல்கள் மூலம், உங்களைக் கவர்ந்த ஐந்து அறக்கருத்துகளைத் தொகுத்து விவரிக்க. (அல்லது)

ஆ) காற்று பேசியதைப் போல நிலம், நீர், வானம் பேசுவதாகவும் அவை இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்பினை வலியுறுத்துவதாகவும் ஓர் உரையாடல் அமைக்க.

44. அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையை பற்றிய உங்களின் கருத்துகளைக் குறிப்பிடுக. (அல்லது)

ஆ) கு.அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து விவாதித்து எழுதுக.

45. அ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.

குறிப்புகள் : முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com